7--

ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்தல்

வினா எண் 883--**டாக்டர் ஆ. ஞானசேகரன்**--மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழக்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மேல்மலையனூர் தொகுதி கணக்கன்குப்பம், நல்லான் பிள்ளை பெற்றாள் ஆகிய இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுமா?

விடை:

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:

நல்லான் பிள்ளை பெற்றாள் கிராமத்தில் ஏற்கெனவே ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டு தனியார்க் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. 1996-97-ம் ஆண்டில் 300 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டடங்கள் கட்டப்பட உள்ளன. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் புதியக் கட்டடங்கள் கட்டுவதற்கு தேவையான நிலம் நன்கொடையாகக் கிடைத்ததும் எடுத்துக் கொள்ளப்படும். கணக்கன் குப்பத்தில் ஒரு துணை சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. மக்கள் தொகை அடிப்படையில் அங்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

8--

ராமகுண்டம் அனல்மின் நிலையத்திலிருந்து தமிழ்நாடு பெறும் மின் அளவு

வினா எண் 1278--**திரு. கே. சுப்பராயன்**--மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) ராமகுண்டம் அனல் மின் நிலையத்திலிருந்து தமிழ்நாடு பெற்று வருகிற மின்சாரம் எவ்வளவு?

(ஆ) அதை அதிகரிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?